சுருக்கம்

கிராம நிருவாகம் – ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் – முன்னாள் கிராம அலுவலர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் ஆகியவற்றை உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய்த்[பணி8(1)] துறை

அரசாணை (நிலை) எண்.569 நாள்:.26.12.2014

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.828 வருவாய் பணி8(1)துறை நாள் 23.8.1996
2. அரசாணை (நிலை) எண்.629 வருவாய் பணி8(1)துறை நாள் 22.7.1998
3. அரசாணை (நிலை) எண்.40 வருவாய் பணி8(1)துறை நாள் 24.1.2008
4. அரசாணை (நிலை) எண்.168 வருவாய் பணி8(1)துறை நாள் 7.4.2010
5. அரசாணை (நிலை) எண்.396 வருவாய் பணி8(1)துறை நாள் 12.11.2012
6. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் 8.8.2014 ஆம் நாளிட்ட அறிவிப்பு
7. கூடுதல் தலைமை செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் கடித ந.க.எண்.வநி2(2)/43851/2013 நாள் 4.9.2014

***

ஆணை:–

அவசரச்சட்டம் 10/80–ன் படி 14.11.1980–ல் பதவியிழந்த முன்னாள் கிராம அலுவலர்கள் (முன்சீப்/கர்ணம்) மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி 5.12.1986 முதல் சிறப்பு ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள்.

2. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் முன்னாள் கிராம அலுவலர்களது சிறப்பு ஓய்வூதியத்தை ரூ.1140/–லிருந்து ரூ.1500/–ஆகவும் குடும்ப ஓய்வூதியத்தை ரூ.560/–லிருந்து ரூ.1000/–ஆக பிறபடிகளின்றியும் உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் 8.8.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையில் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

"மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தற்போது ஓய்வூதியம் பெறும் 3672 முன்னாள் கிராம அலுவலர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியம் ரூ.1500/–லிருந்து ரூ.2000/– ஆகவும், குடும்ப ஓய்வூதியம் பெறும் 852 முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்பங்களுக்கு ரூ.1000/–லிருந்து ரூ.1500/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்".

4. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, கூடுதல் தலைமை செயலாளர்/வருவாய் நிருவாக் ஆணையர் தனது அறிக்கையில், தற்போது ஓய்வூதியம் பெறும் 3672 முன்னாள் கிராம அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஓய்வூதியத்தினை ரூ.1500/–லிருந்து ரூ.2000/– ஆகவும் குடும்ப ஓய்வூதியம் பெறும் 852 முன்னாள் கிராம அலுவலர்களது குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப ஓய்வூதியத்தினை பிற படிகளின்றி ரூ.1000/–லிருந்து ரூ.1500/– ஆக உயர்த்தி வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

5. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, கூடுதல் தலைமை செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் பரிந்துரையினை அரசு நன்கு ஆய்வு செய்தது. முன்னாள் கிராம அலுவலர்களின் நிலையினை கருத்தில் கொண்டும், தற்போதுள்ள விலைவாசி, மருத்துவம் (ம) குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டும், முதியோர் உதவித் தொகை வழங்கப்படுவது போல், முன்னாள் கிராம அலுவலர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஓய்வூதியத்தை ரூ.1500/–லிருந்து ரூ.2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும் ) ஆகவும் அவர்களது குடும்ப ஓய்வூதியத்தை பிறபடிகளின்றி ரூ.1000/–லிருந்து ரூ.1500/–(ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு மட்டும்) ஆகவும் உயர்த்தி, அரசாணை வெளியிடும் நாள்முதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.6486/ஓய்வூதியம்/நிதி/2014 நாள் 5.6.2014 இன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா.வெங்கடேசன்
அரசு செயலாளர்.

<u>பெறுநர்:</u>
கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை–15.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
மாநில கணக்காயர், (RAO) சென்னை–9.
மாநில கணக்காயர், (A&E/G&SSA) சென்னை–18.
தமிழ்நாடு கிராம அதிகாரிகள் சங்கம், 6வது மெயின் ரோடு, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.
<u>நகல்:</u>
மாண்புமிகு அமைச்சர்[வருவாய்] அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை, சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9
வருவாய்த் (வ.நி–3) துறை, சென்னை–9.
இ.கோ./உபரி நகல்கள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

26-12-2014.
பிரிவு அலுவலர்